**வாக்குமூலம்**
**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி**
**சி.சி.எண்.233/19**
**வழக்கு சாட்சி – அ.சா.5**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நாகராஜீ | ஜாதி | |
| தந்தைபெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.11.23

**( எதிரி ஆஜர்.)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது சின்னமனூர் காவல்நிலையத்தில் த.காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 8.5.19 ம் தேதி பிசிபட்டி காவல்நிலையத்தில் த.காவலராக பணியில் இருந்த போது காலை 8 மணிக்கு போடியை சேர்ந்த ராமசாமி மகன் செல்வகுமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண்.228/19 இதசபிரிவு 174CrPC (Accidental fall) ன் கீழ் வழக்கு பதிவு செய்து சார்பு ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். அன்றையதினமே 11.30 மணிக்கு இவ்வழக்கில் இறந்த புழுகுசாமி என்பவரின் பிரேதத்தை காவல் ஆய்வாளரின் உத்தரவுப்படி கடவு சீட்டு பெற்று மதுரை அரசு மருத்துவமனையில் பிரேதத்தை அடையாளம் காண்பித்து பிரேதபரிசோதனை செய்வதற்கு உதவியாக இருந்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையில் மேற்படி இறந்த நபர் ஆட்டோவில் தூங்கி கொண்டே வந்து தவறி விழுந்து இறந்துவிட்டதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். இறந்த நபர் ஆட்டோவின் பின்புறமாக உட்கார்ந்து வந்தார் என்றும், ஆட்டோ ஓட்டுனர் ஆட்டோவை திடீரென பிரேக் பிடித்ததால் மேற்படி நபர் கிழே விழுந்துவிட்டதாக புகாரில் விபரம் எதுவும் காட்டவில்லை என்றால் சரிதான். புகாரில் இறந்த நபரின் ஆஜாக்கிரதையும் தூங்கி கொண்டே வந்ததால் தான் கிழே விழுந்து இறந்ததாக காட்டப்படடுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை காலம் 14 ல் தகவல் கொடுப்பவரின் கையெப்பம் பெறப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் புகார் எதுவும் கொடுக்கபடவில்லை என்றும் எழுதாத வெள்ளைப்பேப்பரில் கையெப்பம் பெற்றுக்கொண்டு பின்னிட்டு புகார் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவதன்று வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்டோவை எதிரி ஓட்டவில்லை என்றால் சரியல்ல